தூத்துக்குடியில் கனமழையால் பாதிக்கப்பட்ட பல்வேறு இடங்களில் அங்குள்ள மக்களுக்கு கழக மகளிரணி செயலாளரும், நாடாளுமன்ற கழக குழுத் துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் வெள்ள நீரில் இறங்கி நேரில் சென்று நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமை!

ஆலத்தூர் ஒன்றியப் பெருந்தலைவர் என். கிருஷ்ணமூர்த்தி 79 வது பிறந்தநாள்!

அமைச்சர் கே.என்.நேரு - ஆ.இராசா எம்.பி. - தொல்.திருமாவளவன் வாழ்த்து!

பெரம்பலூர், டிச.21-

ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவருமான என்.கிருஷ்ண மூர்த்தி 79 வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஆலத்தூர் ஒன்றிய பெருந்தலைவருமான என். கிருஷ்ணமூர்த்தி தனது குடும்பத்தினர் மற்றும் கட்சியினருடன் சேர்ந்து பிறந்த நாள் கேக் வெட்டினார். நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஆ.இராசா. எம்.பி., தொல். திருமாவளவன் எம்.பி., ஆகியோர் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தனர். போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொளக்கானத்தம் கிராமத்திற்கு நேரில் வந்து வாழ்த்து தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து கட்சியினர், தொழிலதிபர்கள், முக்கிய பிரமுகர்கள், இளைஞர்கள் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் சால்வை அணிவித்து, பூங்கொத்து, பரிசு பொருட்கள் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். இந்நிகழ்வில் திருச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் காடுவெட்டி ந. தியாக ராஜன்,எம்.எல்.ஏ, திருச்சி மத்திய மாவட்ட கழக செயலாளர் வைரமணி, துறையூர் எம்.எல்.ஏ. ஸ்டாலின் குமார், பெரம்பலூர் ரோவர் கல்வி நிறுவனங்களின் சேர்மன் வரதராஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.இராஜேந்திரன், திருச்சி மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் தர்மன் ராஜேந்திரன், மாவட்டக் கழகச் துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஒன்றிய கழக செயலாளர்கள் எம். ராஜ்குமார், தி.மதியழகன், பெரம்பலூர் ஒன்றிய பெருந்தலைவர் மீனா அண்ணாதுரை, வேப்பூர் ஒன்றிய பெருந்தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கார்மேகம், ஊராட்சி மன்ற தலைவர்கள் ந.ராகவன், பாலமுருகன், அகிலா ராமசாமி, அன்புச்செல்வன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் மதியழகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வ.சுப்ரமணியன், ஒன்றிய கவுன்சிலர்கள் இளவரசு, சத்யா சாமிதுரை, கிளைக் கழக செயலாளர் ராஜேந்திரன், ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணியின் ஒருங்கிணைப்பாளர் சக்திவேல், இளைஞரணி பிரபு, பகுதி மாணவரணி துணை அமைப்பாளர் நந்தகுமார், ஒப்பந்ததாரர்கள் அமர்நாத், வெங்கடேசன்,மற்றும் மாவட்ட, நகர, பேரூர் ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள், தொண்டர்கள் உள்பட கட்சியின் முன்னனி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இருதயநோய்க்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிக்கு

மருத்துவ உதவியாக ரூ.50 ஆயிரம் - தயாநிதிமாறன் எம்.பி. ஏற்பாடு!

பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம் நன்றி!

சென்னை, டிச.21-

இருதய நோயால் உடல் நலக் குறைவு ஏற்பட்டு தி மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் த.ராஜேந்திரன் என்பவருக்கு ரூபாய் 50 ஆயிரம் பிரதமர் தேசிய நிவாரண நிதி மூலமாக மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஏற்பாடு செய்தார்.

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதியை சேர்ந்த த. ராஜேந்திரன் இருதய நோய் காரணமாக முகப்பேரில் உள்ள தி மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவமனையில் சிகிச்சை பெற ரூ 50 ஆயிரம் பிரதமர் தேசிய நிவாரண நிதியில் இருந்து பெற்று சிகிச்சை பெற மத்திய சென்னை நாடாளுமன்ற மன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஏற்பாடு செய்தார் .

இக்கோரிக்கையினை பரிசீலனை செய்து நிவாரண நிதி கிடைக்க ஆவன செய்த தயாநிதி மாறனுக்கு ஆயிரம் விளக்கு மேற்கு பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் நன்றி தெரிவித்தார்.

திருப்பூர் பூங்கா சாலையில் அமைந்துள்ள கே.எஸ்.ஆர். திருமண மண்டபத்தில் தன் வாழ்க்கையை சமூகப் புரட்சிக்காகவே ஒப்படைத்து, திராவிட சித்தாந்த பலத்தோடு சமூக நலத்திட்டங்களின் வழி நம்மை முன்னோக்கி நகர்த்திட்ட ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சியை திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில், மாநகரக் கழகச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை- அன்னவாசலில்

2,225 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் வழங்கினர்!

புதுக்கோட்டை டிச. 21

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், 2,225 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 19.12.2023 அன்று வழங்கினார்.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கரைகொண்டு பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல் படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் மாணவ, மாணவிகள் பள்ளிக்கு உரிய நேரத்திற்குள் சென்றுவரும் வகையில் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி வருகிறார்கள். அதன்படி இன்றையதினம் 2,225 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது. அதன்படி அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், வயலோகம் அரசினர் மேல் நிலைப்பள்ளியில், வயலோகம், பரம்பூர், முக்கணாமலைப்பட்டி பள்ளிகளைச் சேர்ந்த 232 மாணவர்களுக்கும், 247 மாணவிகளுக்கும், அன்னவாசல் அரசு மேல்நிலைப்பள்ளியில் அன்னவாசல், இலுப்பூர், கீழக்குறிச்சி, மண்ணவேளாம்பட்டி, இராப்பூசல், மருதாந்தலை பள்ளிகளைச் சேர்ந்த 339 மாணவர்களுக்கும், 549 மாணவிகளுக்கும் மற்றும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், காரையூர் அரசு மேல்நிலைப்பள்ளியில், காரையூர், மேலத்தானியம், சடையம்பட்டி, நகரப்பட்டி பள்ளிகளைச் சேர்ந்த 172 மாணவர்களுக்கும், 179 மாணவிகளுக்கும், பொன். புதுப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் பொன். புதுப்பட்டி, பொன்னமராவதி, ஆலவயல் பள்ளிகளைச் சேர்ந்த 132 மாணவர்களுக்கும், 254 மாணவிகளுக்கும், மேலைசிவபுரி அரசு மேல்நிலைப்பள்ளியில் மேலைசிவபுரி பள்ளியினைச் சேர்ந்த 64 மாணவர்களுக்கும், 57 மாணவிகளுக்கும் என ஆகமொத்தம் 2,225 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகள் வழங்கப்பட்டன.

மேலும் தமிழக அரசின் மூலம் வழங்கப்பட்டுள்ள இந்த மிதிவண்டிகளை மாணவ, மாணவிகள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் மாணவ, மாணவிகள் மிதிவண்டி யினை நாள்தோறும் பயன்படுத்துவதன் மூலம் தங்களுக்கு உடற்பயிற்சியாகவும் அமைகிறது என எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர் பொன்னமராவதி வட்டாரம், காரையூரில், நபார்டு திட்டத்தின்கீழ், ரூ.39.55 இலட்சம் மதிப்பீட்டில், விதை சேமிப்புக் கிடங்குடன் கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. இதன்மூலம் இப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு தேவையான விதைகள் மற்றும் இடுப்பொருட்கள் இருப்பு வைத்து வழங்கவும் வழிவகை ஏற்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலம் இப்பகுதியில் உள்ள விவசாய குடும்பங்கள் பயன்பெறும்.

இந்நிகழ்ச்சியில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம்.மஞ்சுளா, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி, (வேளாண் பொறியியல்துறை) செல்வம், சடையப்பட்டி பெற்றோர் ஆசிரியர் தலைவர் அ.முத்து, பள்ளித்துணை ஆய்வாளர் வேலுச்சாமி, கே.எஸ்.சந்திரன், சு.சண்முகம். அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சைதைமேற்குபகுதி 139 அ வட்டத்தில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சாரதி நகர், சேகர் நகரில் உள்ள 11 தெருக்கள், வி.எஸ். முதலி தோட்டத்தெரு, காமராஜர் காலனியில் உள்ள 4 தெருக்கள், வ.உ.சி.பிளாக், பாரதிபிளாக்கில் உள்ள 5 தெருக்கள், வீதிமாரியம்மன் கோயில்தெரு ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட 5000(ஐந்தாயிரம்) குடும்பங்களுக்கு தலா 5கிலோ அரிசி,போர்வை,பிரட், பால் பாக்கெட், குடிநீர் பாட்டில், உணவு ஆகியவற்றை, 4,5,6,7,9 ,12 ஆகிய ஐந்து நாட்கள் மக்களை நேரில் சந்தித்து, 5ஆயிரம் குடும்பங்களுக்கு பகுதி செயலாளர். மண்டலக்குழுத் தலைவர். எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் ப.சுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் மாவட்ட செயலாளர். அமைச்சர். மா.சுப்பிரமணியன் வழங்கினார். இதில் வட்டச் செயலாளர் சை.மு.சேகர் தலைமை தாங்கினார். இந்நிகழ்வுகளில் சைதை. எஸ்.குணசேகரன், சைதை. மா.அன்பரசன், களக்காடு எல்லப்பன், வி.பி.ஜானகிராமன் உள்ளிட்ட பகுதிகழக நிர்வாகிகள், வட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள் களப்பணியாளர்கள் பங்கேற்றனர்